# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெள்ளிக்கிழமை நாள் 11.04.2025 காலை 10.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி அவசரக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

### பொருள்: 1

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 62, **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AJ, பிளாக் எண் 16, நகரளவு எண் 117/1 முதல் 117/10 வரையில்** கட்டுப்பட்ட கீழ்க்கண்ட இடங்களில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 20.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | நகரளவு எண் | பரப்பு | வகைப்பாடு | கலம் |
|---|---|---|---|---|
| 1 | 117/1 | ஹெக் 1.77.26 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை சாணிப்பாறை பள்ளம் |
| 2 | 117/2 | 34.5 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 3 | 117/3 | 41 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 4 | 117/4 | 57 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 5 | 117/5 | 18 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 6 | 117/6 | 11.5 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 7 | 117/7 | 14.5 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 8 | 117/8 | 181 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 9 | 117/9 | 49 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை |
| 10 | 117/10 | 334 ச.மீ. | சர்க்கார் புறம்போக்கு | மலை பூஸ்திதி தெரு |

அதனைத் தொடர்ந்து, இடங்கள் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடங்கள், **மாதா கோவில் – இராமச்சந்திரா நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில்** அமைந்துள்ளன. மேலும், உத்தேச இடங்கள், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4351/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 219 பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 62 **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AJ, பிளாக் எண் 20, நகரளவு எண் 40–ல் கட்டுப்பட்ட ஹெக் 3.1020.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 20.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **அண்ணாநகர் – சொக்கலிங்கபுரத்தைச் சுற்றியுள்ள பகுதியில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **கலத்தில் "மலை"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4352/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 220 பொருள்: 2 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 57, **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AL, பிளாக் எண் 27, நகரளவு எண் 17–ல் கட்டுப்பட்ட ஹெக் 0.2550.0 ச.மீ.** மற்றும் & **நகரளவு எண் 142ல் கட்டுப்பட்ட ஹெக் 0.2000.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 20.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **அரசு காலனி அருகில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **கலத்தில் "வண்டிப் பாதை" (நகரளவு எண் 17), "சாஸ்வத வண்டிப் பாதை" (நகரளவு எண் 142)** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4353/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 221 பொருள்: 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 4

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண். 57 **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AK, பிளாக் எண் 19, நகரளவு எண் 2-ல் கட்டுப்பட்ட ஹெக் 0.0700.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 20.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **பாப்பா காலனி பகுதியில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **கலத்தில் "வண்டிப் பாதை"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4354/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 222 பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 57., **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AL, பிளாக் எண் 29, நகரளவு எண் 39-ல் கட்டுப்பட்ட ஹெக் 0.0800.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 20.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **மதுரை ரோடு – சாந்தி நகர் அருகில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **கலத்தில் "தரிசு"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4355/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 223 பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 6

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி பகுதி மற்றும் அதனைச் சுற்றி 8 கிலோ மீட்டருக்குள் ஆட்சேபனையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டிக் குடியிருந்து வரும் நபர்களுக்கு வரன்முறை செய்து பட்டா வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டது என்றும், கீழ்க்கண்ட பகுதிகளில் குடியிருக்கும் நபர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப ஏதுவாக மாநகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (கிழக்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ1/945/2025,** நாள் 01.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பட்டியலில் கீழ்க்கண்டுள்ள இடங்கள் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

**செங்குளம் – கொட்டப்பட்டு கிராமம்**

| **வ.எண்** | **வார்டு மற்றும் பிளாக்** | **நகரளவு எண்** | **வகைப்பாடு** |
|---|---|---|---|
| 1 | வார்டு AW, பிளாக் எண் 13 | 6 முதல் 69 வரை | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 2 | வார்டு W, பிளாக் எண் 30 | 61 முதல் 84 வரை | சர்க்கார் புறம்போக்கு – தரிசு |

**சாத்தனூர் (தெ) கிராமம்**

| **வ.எண்** | **வார்டு மற்றும் பிளாக்** | **நகரளவு எண்** | **வகைப்பாடு** |
|---|---|---|---|
| 3 | வார்டு AU, பிளாக் எண் 13 | 218 முதல் 279 வரை கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 4 | வார்டு AI, பிளாக் எண் 1 | 44 | சர்க்கார் புறம்போக்கு – கல்லாங்குத்து |

**திருச்சி கிராமம்**

| **வ.எண்** | **வார்டு மற்றும் பிளாக்** | **நகரளவு எண்** | **வகைப்பாடு** |
|---|---|---|---|
| 5 | வார்டு P, பிளாக் எண் 21 | 1–2 முதல் 1–27 வரை | சர்க்கார் புறம்போக்கு – கிருஷ்ணாபுரம் ரோடு |

**தேவதானம் – சிந்தாமணி கிராமம்**

| **வ.எண்** | **வார்டு மற்றும் பிளாக்** | **நகரளவு எண்** | **வகைப்பாடு** |
|---|---|---|---|
| 6 | வார்டு F, பிளாக் எண் 22 | 330/2 | சர்க்கார் புறம்போக்கு – ரோடு |
| 7 | வார்டு F, பிளாக் எண் 17 | 9 | சர்க்கார் புறம்போக்கு – ஆற்றங்கரை தெரு |
| 8 | வார்டு F, பிளாக் எண் 17 | 25 | சர்க்கார் புறம்போக்கு – மாநகராட்சி கழிவறை |

**வரகனேரி கிராமம்**

| **வ.எண்** | **வார்டு மற்றும் பிளாக்** | **நகரளவு எண்** | **வகைப்பாடு** |
|---|---|---|---|
| 9 | வார்டு O, பிளாக் எண் 15 | 68 | சர்க்கார் புறம்போக்கு – வரகனேரி பஜார் தெரு |

எனவே, மேற்படி இடங்களில், மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/4550/2025/மையம்)

**தீர்மானம் எண்: 224 பொருள்: 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 7

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டத்திற்குட்பட்ட மாநகராட்சி பகுதி மற்றும் அதனைச் சுற்றி 8 கிலோ மீட்டருக்குள் ஆட்சேபனையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு வரன்முறை செய்து பட்டா வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டது என்றும் கீழ்க்கண்ட பகுதிகளில் குடியிருக்கும் நபர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப ஏதுவாக மாநகர் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (கிழக்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ1/945/2025, நாள் 27.03.2025**ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, பட்டியலில் கீழ்க்கண்டுள்ள இடங்கள் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

**செங்குளம் – கொட்டப்பட்டு கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 1 | வார்டு AE, பிளாக் எண் 21 | 2 முதல் 19 வரை, 21 முதல் 40 வரை, 42 முதல் 62 வரை, 65 முதல் 73 வரை, 76 முதல் 79 வரை, 81 முதல் 93 வரை, 98 முதல் 100 வரை, 104 முதல் 135 வரை | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 2 | வார்டு AF, பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33 | பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33ல் கட்டுப்பட்ட புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – ஜெயில் காலரா கேம்ப் |
| 3 | வார்டு W, பிளாக் எண் 2 | 107 | சர்க்கார் புறம்போக்கு – பள்ளிக்கூடம் |
| 4 | வார்டு W, பிளாக் எண் 3 | 1 | சர்க்கார் புறம்போக்கு – முனிசிபல் இடம் |
| 5 | வார்டு AW, பிளாக் எண் 14 | 6 முதல் 114 வரை (8, 16, 21, 35, 37, 44, 54, 70, 78, 82, 97, 102, 112 நீங்கலாக) | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |

**சாத்தனூர் (தெ) கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 6 | வார்டு AU, பிளாக் எண் 9 | 1 முதல் 165 வரை கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 7 | வார்டு AI, பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33 | பிளாக் எண் 1 மற்றும் 3ல் கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – ஜெயில் காலரா கேம்ப் |

**அரியமங்கலம் கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 8 | வார்டு S, பிளாக் எண் 7 | 1 முதல் 96 வரை கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 9 | வார்டு S, பிளாக் எண் 8 | 1 முதல் 136 வரை கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 10 | வார்டு AI, பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33 | பிளாக் எண் 1 மற்றும் 3ல் கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – ஜெயில் காலரா கேம்ப் |

**ஆலத்தூர் கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 11 | வார்டு T, பிளாக் எண் 41 | 113 | சர்க்கார் புறம்போக்கு – வண்டிப்பாதை |
| 12 | வார்டு T, பிளாக் எண் 46 | 1 மற்றும் 4 | சர்க்கார் புறம்போக்கு – வண்டிப்பாதை |
| 13 | வார்டு S, பிளாக் எண் 8 | 1 முதல் 136 வரை கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |
| 14 | வார்டு AI, பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33 | பிளாக் எண் 1 மற்றும் 3ல் கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – ஜெயில் காலரா கேம்ப் |

**தேவதானம் – சிந்தாமணி கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 15 | வார்டு F, பிளாக் எண் 12 | 12 | சர்க்கார் புறம்போக்கு – மயானம் |
| 16 | வார்டு F, பிளாக் எண் 22 | 38 | சர்க்கார் புறம்போக்கு – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி |
| 17 | வார்டு AI, பிளாக் எண்கள் 6, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 33 | பிளாக் எண் 1 மற்றும் 3ல் கட்டுப்பட்டுள்ள புல எண்கள் | சர்க்கார் புறம்போக்கு – ஜெயில் காலரா கேம்ப் |

**உக்கடை அரியமங்கலம் கிராமம்**

| வ.எண் | வார்டு மற்றும் பிளாக் | நகரளவு எண் | வகைப்பாடு |
|---|---|---|---|
| 18 | வார்டு R, பிளாக் எண் 3 | 1 முதல் 80 வரை உள்ள புலங்கள் | சர்க்கார் புறம்போக்கு – சந்தப்பேட்டை மலை |
| 19 | வார்டு R, பிளாக் எண் 4 | 2 முதல் 38 வரை | சர்க்கார் புறம்போக்கு – நத்தம் |

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/4373/2025/மையம்)

**தீர்மானம் எண்: 225 பொருள்: 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் வட்டம், வார்டு குழு அலுவலகம் 1 (ஸ்ரீரங்கம் கோட்டம்), தேர்தல் வார்டு எண் 4, **வெள்ளித்திருமுத்தம் கிராமம், புதிய வார்டு B, பிளாக் எண் 49, நகரளவு எண் 2167/2–ல் கட்டுப்பட்ட ஹெக் 0.4174.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் 63 குடும்பங்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் அ3/620/2025, நாள்** 03.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **பயன்பாட்டுக் கலத்தில் "குடியிருப்பு"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண்கள் WP (MD) No.8399/2017 & WMP (MD) No.6399/2017ன் தீர்ப்புரையின் அடிப்படையில், **2167/2ல் பூஸ்திதி சாலை (40 அடி) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியினைத் தவிர்த்து, மீதமுள்ள இடத்திற்கு தடையின்மை** வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண்கள் WP (MD) No.8399/2017 & WMP (MD) No.6399/2017ன் தீர்ப்புரையின் அடிப்படையில், **2167/2ல் பூஸ்திதி சாலை (40 அடி) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியினைத் தவிர்த்து, மீதமுள்ள இடத்திற்கு தடையின்மை வழங்கலாம்.**

(எப்1/4581/2025/மையம்)

**தீர்மானம் எண்: 226 பொருள்: 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), புத்தூர் கிராமம், **புதிய வார்டு Y, பிளாக் எண் 6, நகரளவு எண்கள் 2, 3, 4, புதிய வார்டு Y, பிளாக் எண் 5, நகரளவு எண்கள் 12, 14, 15, புதிய வார்டு Y, பிளாக் எண் 3, நகரளவு எண் 31/2 மற்றும் உய்யகொண்டான் திருமலை கிராமம், புதிய வார்டு J, பிளாக் எண் 7, நகரளவு எண் 20/1-ல் கட்டுப்பட்ட கீழ்க்கண்ட** இடங்களில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024,** நாள் 03.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு, பிளாக், நகரளவு எண்கள் | பரப்பு (ச.மீ.) | வகைப்பாடு | கலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு Y, பிளாக் 6, TS No.2 | 0.14.00 கைப்பிரதியின் படி | சர்க்கார் புறம்போக்கு | ரோடு | --- |
| 2 | வார்டு Y, பிளாக் 6, TS No.3 | 0.08.23 | | பொதுக் கழிப்பிடம் | --- |
| 3 | வார்டு Y, பிளாக் 6, TS No.4 | 0.75.00 | | வண்ணான்கள் | துணி துவைக்கும் இடம் |
| 4 | வார்டு Y, பிளாக் 3, TS No.31/2 | 0.75.87 | சர்க்கார் புறம்போக்கு | --- | GHS புறம்போக்கு |
| 5 | வார்டு Y, பிளாக் 5, TS No.12 | 0.07.94 | சர்க்கார் மனை | நத்தம் பிரைவேட் காலியிடம் | --- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | வார்டு Y, பிளாக் 5, TS No.14 | 0.11.76 | சர்க்கார் மனை | --- | வண்ணான் துணி துவைக்கும் இடம் |
| 7 | வார்டு Y, பிளாக் 5, TS No.15 | 0.11.93. | சர்க்கார் மனை | வண்ணான் துணி துவைக்கும் இடம் | --- |
| 8 | வார்டு J, பிளாக் 7, TS No.20/1 | 0.13.00 | சர்க்கார் புறம்போக்கு | --- | நத்தம் |

அதனைத் தொடர்ந்து, இடங்கள் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடங்கள், **புத்தூர் வண்ணாரப்பேட்டையிலும் (வார்டு Y), உய்யகொண்டான் திருமலை – MM நகரிலும் (வார்டு J)** அமைந்துள்ளன. மேலும், உத்தேச இடங்கள், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு & சர்க்கார் மனை"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு **தடையின்மை வழங்கலாம்.**

**(எப்1/4583/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 227 பொருள்: 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 2 (அரியமங்கலம் கோட்டம்), திருச்சி டவுன் கிராமம் மற்றும் செங்குளம் கிராமங்களுக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டிக் குடியிருந்து வரும் சுமார் 44 நபர்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (கிழக்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ1/16-5/2024, நாள் 15.03.2025**ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திருச்சி டவுன் கிராமம்**

| வ.எண் | வார்டு | பிளாக் எண் | நகரளவு எண் | வகைப்பாடு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | P | 21 | 1-1 முதல் 1-27 வரை | சர்க்கார் புறம்போக்கு | தரிசு |

**செங்குளம் கிராமம்**

| வ.எண் | வார்டு | பிளாக் எண் | நகரளவு எண் | வகைப்பாடு | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | W | 30 | 61 முதல் 84 வரை | சர்க்கார் மனை | கிருஷ்ணாபுரம் தெரு |

அதனைத் தொடர்ந்து, இடங்கள் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி உத்தேச இடங்கள், நகரளவைக் கணக்குகளில், சர்க்கார் புறம்போக்கு (திருச்சி டவுன் கிராமம்) மற்றும் சர்க்கார் மனை (செங்குளம் கிராமம்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினால், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு **தடையின்மை வழங்கலாம்.**

**(எப்1/4531/2025/வா.கு.அ.2)**

**தீர்மானம் எண்: 228 பொருள்: 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 5 (கோ.அபிஷேகபுரம் கோட்டம்), **தாமலவாரூபயம் கிராமம், தேர்தல் வார்டு எண் 8ல்** கட்டுப்பட்ட **கீழ்க்கண்ட இடங்களில்** வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 04.04.2025ன்** வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு, பிளாக், நகரளவு எண்கள் | பரப்பு (ச.மீ.) | வகைப்பாடு | கலம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு L, பிளாக் 21, TS No.1 | 0.1340.0 | சர்க்கார் புறம்போக்கு | வடக்கு கல்நாயக்கன் தெரு | --- |
| 2 | வார்டு L, பிளாக் 21, TS No.37 | 0.1015.0 | சர்க்கார் புஞ்செய் | தெரு – கல்நாயக்கன் தெரு | --- |
| 3 | வார்டு L, பிளாக் 22, TS No.1 | 0.1612.0 | சர்க்கார் புறம்போக்கு | தெரு | வடக்கு கல்நாயக்கன் தெரு |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **உறையூர் – கீழகல்நாயக்கன் தெருவி** அமைந்துள்ளது. உத்தேச இடங்கள், நகரளவைக் கணக்குகளில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனவும், **"சர்க்கார் புஞ்செய்"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனவும், **"சர்க்கார் புஞ்செய்"** எனவும் வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4619/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 229 பொருள்: 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), **கோ.அபிஷேகபுரம் கிராமம், தேர்தல் வார்டு எண் 53, புதிய வார்டு X, பிளாக் எண் 10, நகரளவு எண் 140/1–ல் கட்டுப்பட்ட ஹெக் 0.0271.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில், வசித்து வரும், பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள்** 04.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **பீமநகர் பகுதியில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனவும், உபயோகக் கலத்தில் **"தெரு"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மைச் சான்று வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4620/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 230 பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 13

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3, திருவெறும்பூர் வட்டம், **திருவெறும்பூர் கிராமம்,** கீழ்க்கண்ட **அரசுப் புறம்போக்கு** இடங்களில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் பொதுமக்களுக்கு, ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்திப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருவெறும்பூர் வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் அ1/1369/2025, நாள்** 01.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | புல எண் | பரப்பு (ஹெக் ச.மீ.) | வகைப்பாடு |
|---|---|---|---|
| 1 | 273 | 0.81.0 | நத்தம் |
| 2 | 137/1 | 2.38.0 | புன்செய் தரிசு |
| 3 | 136/4 | 0.26.0 | புன்செய் தரிசு |
| 4 | 176C/2 | 0.22.5 | புன்செய் தரிசு |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உத்தேச இடம், நகரளவைக் கணக்குகளில், **"நத்தம் & புன்செய் தரிசு (அரசுப் புறம்போக்கு)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி இடங்களில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடங்களில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகரளவைக் கணக்கில், **"நத்தம் & புன்செய் தரிசு (அரசுப் புறம்போக்கு)"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

**(எப்1/4739/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 231 பொருள்: 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 14

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 3, திருவெறும்பூர் வட்டம், **கீழகல்கண்டார் கோட்டை கிராமம்,** கீழ்க்கண்ட **அரசுப் புறம்போக்கு** இடத்தில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டி குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு, ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்திப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருவெறும்பூர் வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் அ4/1369/2025, நாள்** 08.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | புல எண் | பரப்பு (ஹெக் ச.மீ.) | வகைப்பாடு |
|---|---|---|---|
| 1 | 143/30 | 0.5150.0 | காலிநத்தம் |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"காலிநத்தம் (அரசுப் புறம்போக்கு)"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** நகரளவைக் கணக்கில், **"காலிநத்தம் (அரசுப் புறம்போக்கு)"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/4774/2025/மையம்)

**தீர்மானம் எண்: 232 பொருள்: 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள் :15

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 4, **தேர்தல் வார்டு எண் 62, பிராட்டியூர் (கி) கிராமம், புல எண் 173/2, புதிய வார்டு AJ, பிளாக் எண் 22, சர்வே எண் 2/2, பஞ்சப்பூர், பழைய மதுரை ரோட்டில்** அமையவுள்ள ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி வளாகத்தில், மறைந்த **தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவச் சிலையினை**, அரசு வழிகாட்டுதல் மற்றும் விதிகளுக்குட்பட்டு அமைக்க உரிய அனுமதியும், ஆட்சேபனையின்மைச் சான்றும் (NOC), மேலும் அச்சிலையினை எதிர்காலத்தில் தங்களது சொந்தப் பொறுப்பிலேயே பராமரிக்க அனுமதியும் வழங்கிடுமாறு, "திரு.மு.அன்பழகன் M.A., மாநகரச் செயலாளர் – திருச்சி மாநகரம் (மேற்கு), திராவிட முன்னேற்றக் கழகம்" அவர்களின் விண்ணப்பம், நாள் 24.02.2025ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உத்தேச இடம், மாநகராட்சிக்குச் சொந்தமான இடமாகும். இவ்விடம் நகரளவைக் கணக்கில் **ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மேலும், அரசாணை (நிலை) எண் 183 வருவாய் (நி.மு.4(1) துறை, நாள் 23.05.2017ல், சிலை அமைப்பது தொடர்பான வழிமுறைகள் கீழ்க்கண்டுள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

2. **சிலை அமைத்தல், பராமரித்தலுக்கான முழுச் செலவையும் சிலை அமைக்கக் கோரும் மனுதாரரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.**
3. **வெண்கலத்தினாலான சிலையினை மட்டுமே அமைக்க வேண்டும். சிலை அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களிடமே விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர், மாவட்ட ஆட்சியர் அவர்கள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நெடுஞ்சாலைத்துறை மற்றும் காவல் துறையினரின் அறிக்கையுடன், தனது பரிந்துரையை அரசிற்கு அனுப்பி வைக்க வேண்டும்.**

இந்நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகரக் காவல் ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் சி2/9123/2025, நாள் 03.04.2025ல், பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி வளாகத்தின் மேற்கு முகப்புப் பகுதியில், பைபர் மெட்டீரியலால் கோல்ட் கலரில் 20 அடி உயரத்தில் அமையவுள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலையினைத் திறக்க, ஒருசில இந்து அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவிக்க வாய்ப்புள்ளதாலும், சிலை அமையவுள்ள இடம் பொதுமக்கள் அதிகமாக வந்துசெல்லும் இடமாக உள்ளதாலும், சிலை பாதுகாப்பாக இருப்பதற்கு, சிலையினைச் சுற்றி கம்பி வேலி அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை (நிலை) எண் 183, வருவாய் (நி.மு.4(1) துறை, நாள் 23.05.2017ன் அடிப்படையிலும், மாநகரக் காவல் ஆணையர் அவர்களின் தடையின்மைச் சான்றின்படியும், அவ்விடத்தில் தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவச் சிலையினை அமைக்க, அரசின் அனுமதியினைப் பெற்றுத்தரக் கோரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u> மேற்படி சிலையினை அமைக்க அரசின் அனுமதியினைப் பெற்றுத்தரக் கோரி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பி வைக்க ஒப்புதல் வழங்கலாம்.

**(எப்1/2132/2025/மையம்)**

**தீர்மானம் எண்: 233 பொருள்: 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள் ;16

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 29280 / 2016 / IT, நாள்.15.04.2024, 21.06.2024, 29.08.2024 மற்றும் 29.11.2024 ஆகிய கடிதங்களில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் இயங்கி வரும் வரிவசூல் மையங்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் சொத்துவரி, குடிநீர் இணைப்பு, புதைவடிகால் சேவை ஆகியனவற்றிற்கான விண்ணப்பங்களை www.tnurbaneseva.com என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏதுவாக அதிவேக மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய (VPN Connection) இணையதள இணைப்பு மெசர்ஸ். பி.எஸ்.என்.எல், நிறுவனத்திடம் வாங்கி வழங்கப்பட்டதற்கான உபயோகக் கட்டணத்தொகையினை <u>01.10.2023 முதல் 30.09.2024</u> வரையிலான நான்கு காலாண்டுகளுக்கு செலுத்தப்பட வேண்டிய விவரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண் | மாதம் | தொகை |
|---|---|---|
| 1 | 01.10.2023 – 31.12.2023 | 1667755.68 |
| 2 | 01.01.2024 – 31.03.2024 | 166711.18 |
| 3 | 01.04.2024 – 31.06.2024 | 166711.18 |
| 4 | 01.07.2024 – 30.09.2024 | 166711.18 |
| மொத்தம் | | 6667889.22 |

எனவே, மேற்காணும் பட்டியலின்படி, இம்மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய உபயோகக்கட்டணத் தொகை ரூ.66,67,889/–னை (அறுபத்தி ஆறு இலட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து எண்ணூற்று எண்பத்தி ஒன்பது மட்டும்) மெசர்ஸ்.பி.எஸ்.என்.எல், டெலிகாம் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

நிர்வாக நலன்கருதி மெசர்ஸ்.பி.எஸ்.என்.எல் டெலிகாம் நிறுவனத்திற்கு ரூ.66,67,889/–னை மாமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி M/s. BSNL–க்கு செலுத்தியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி5/7745/2020(மையம்)

**தீர்மானம் எண்: 234 பொருள்: 16 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 17

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு எண்.62 பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனைய கட்டுமானப்பணிகள் தற்போது முடிவுறும் நிலையில் உள்ளது. விரைவில் இப்பேருந்து முனையம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் போது, இப்பேருந்து முனையத்திற்கு நாளொன்றுக்கு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வந்து செல்வார்கள் என்பதால், இப்பேருந்து முனையத்தின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை உடன் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இப்பேருந்து முனையத்தின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்வதற்கு, விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Preparation of Feasibility Report and providing Transaction Advisory Service for identifying Concessionaries for the entire Operation and Maintenance through Revenue sharing model and conventional method for the Integrated Bus Terminal at Panjappur) தயார் செய்து சமர்ப்பிக்குமாறு, கலந்தாலோசகர் நிறுவனமான M/s. Jones Lang Laselle Property Consultants India Pvt. Ltd., Chennai நிறுவனத்திற்கு 13.01.2025ம் தேதியன்று பணி உத்திரவு கடிதம் வழங்கப்பட்டது.

மேற்கண்ட நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விரிவான சாத்திய கூறு அறிக்கை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் வழியாக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, கூர்ந்தாய்வு செய்து உரிய அனுமதி வழங்குமாறு கோரப்பட்டதில், மேற்படி பேருந்து முனையத்தினை 15 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு 27.03.2025ம் தேதியன்று கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து முனையத்தினை 15 ஆண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. அனுமதி அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுவதற்கான கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதற்கும் அனுமதி அளிக்கலாம்.
3. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாடுகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

இ1(மை)/9635/2024

**தீர்மானம் எண்: 235 பொருள்: 17 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 18**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் சுகாதார அலுவலர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்களின் வார்டு அலுவலகங்களில் கணினியில் புள்ளி விவரங்கள் பதிவு செய்ய 16 புள்ளிவிவர தொகுப்பாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒபந்தப்புள்ளி அறிக்கை எண் 29/2024–2025ன் வாயிலாக 13.03.2025 அன்று முதன்முறையாக ஒபந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து பரிந்துரை செய்துள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விவரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்ததாரரின் பெயர் | நிர்வாக கட்டணம் (மதிப்பீட்டு விலையை விட) | |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | 16 புள்ளிவிவர தொகுப்பாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் 180 தினங்களுக்கு பணியமர்த்தும் பணி<br><br>**(மதிப்பீட்டு தொகை ரூ. 24,66 ) இலட்சம்** | 1.M/s. A.N.S Traders Thuraiyur Trichy<br><br>2.M/s. TDMS & Co E.Puthur Trichy<br><br>3 .M/s. Raviveer Associates Trichy | –1.00 % (குறைவு)<br><br>–4.00 % (குறைவு)<br><br>–2.17% (குறைவு) | M/s. TDMS & Co, திருச்சி நிறுவனம் நிர்வாக கட்டண மதிப்பீட்டைக் காட்டிலும் 4.00% குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 24.66 இலட்சத்திற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் நாள் :13,02.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. M/s. TDMS & Co , திருச்சி நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி M/s. TDMS & Co , திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மாமன்றம் ஏற்கலாம்.

[எச்1/1272/2025 (மையம்)]

**தீர்மானம் எண்: 236 பொருள்: 18 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 19**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு லோண்மை பணிகள் தீவிரமாக செயல்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை வளங்கள் பாதுகாக்கவும் மாசுகட்டுப்பாடு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும் இம்மமாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்ம சேகரிக்கப்படும் கோழி கழிவுகளை மறுசுழற்சி செய்யும் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு M/s. ஜே கே மரைன் ப்ராடக்ட்ஸ். புதுக்கோட்டை நிறுவனத்தின் சொந்த வாகனம் மற்றும் பணியாளர்களைக் கொண்டு சொந்த செலவில் கோழி இறைச்சி கடையில் உருவாகும் கோழி கழிவுகளை வாகனங்களில் சேகரித்து திருநெல்வேலியில் மறுசுழற்சி மேலாண்மை பணிகள் செய்து மீன் தீவனம் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இந்நிலையில் M/s. ஜே கே மரைன் ப்ராடக்ஸ். புதுக்கோட்டை நிறுவன கடிதத்தில் கோழி கழிவுகளை அடுத்த மாவட்டத்திற்கு கொண்டு செல்ல முடியவில்லை என்றும் இனிவரும் காலங்களில் இப்பணி தொடர்ந்து செய்ய இயலாத நிலையில் உள்ளதாகவும் சேகரிக்கப்படும் கோழி கழிவுகளை சேகரிக்கப்படும் மாவட்டங்களில் மறுசுழற்சி செய்து மீன் தீவனமாக மாற்றம் செய்யும் மறுசுழற்சி மேலாண்மை பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அதற்கான நிறுவனம் இம்மாநகராட்சியின் அரியமங்கலம் கம்போஸ்ட் பகுதியில் தனது சொந்த செலவில் நிறுவனம் அமைப்பதற்கு இடம் வழங்கிடுமாறு தெரிவித்துள்ளதற்கிணங்க திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சியின் அரியமங்கலம் கம்போஸ்ட் பகுதியில் M/s. ஜே கே மரைன் ப்ராடக்ஸ். புதுக்கோட்டை நிறுவனத்தின் சொந்த செலவில் இயந்திரங்கள் பொருத்தி மறுசுழற்சி மேலாண்மை பணிகளை மேற்கொள்ள அரியமங்கலம் கம்போஸ்ட் பகுதியில் 8000 **சதுர அடி** இடம் வழங்கிடவும் சதுர அடி ஒன்றிற்கு ரூ.7.00 வீதம் மாதம் ஒன்றிற்கு ரூ. 56,000/– வாடகை தொகையை M/s. ஜே கே மரைன் ப்ராடக்ஸ். புதுக்கோட்டை நிறுவனத்திடமிருந்து இம்மாநகராட்சியில் கட்டணம் வசூல் செய்துகொள்ளவும் இப்பணியினை 3 ஆண்டுகள் மேற்கொள்வதற்கான பணி உத்தரவு மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. M/s. ஜே கே மரைன் ப்ராடக்ஸ். புதுக்கோட்டை நிறுவனத்தின் சொந்த செலவில் இயந்திரங்கள் பொருத்தி மறுசுழற்சி மேலாண்மை பணிகளை மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்ள அரியமங்கலம் கம்போஸ்ட் பகுதியில் **8000 சதுர அடிகள்** இடம் வழங்கிடவும் சதுர அடி ஒன்றிற்கு ரூ.7.00 வீதம் மாதம் ஒன்றிற்கு ரூ. 56,000/– வாடகை தொகையை மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து இம்மாநகராட்சியில் கட்டணம் வசூல் செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மறுசுழற்சி மேலாண்மை பணியின் அவசர அவசியம் கருதி **M/s. ஜே கே மரைன் ப்ராடக்ஸ். புதுக்கோட்டை** நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்..

H1/2684/2019(மையம்

**தீர்மானம் எண்:** 237 **பொருள்:** 19 **அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 20

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தினசரி அலுவலக கள ஆய்வு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் – 14 எண்ணிக்கைகள், ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்குவதற்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண்.239 நாள்:27.01.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில், முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.344/2024–25ன் வாயிலாக 19.03.2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. NO | Description | Qty in Nos | Estimate Amount | | M/s. K.B.R. Tyres, Kumbakonam | | M/s.Balaji Tyres, Jayankondam | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) |
| | **Supply and Delivery of New Tyres & tubes for Corporation Vehicles including Transportation charges etc, complete. as directed by the Departmental Officers** | | | | | | | |
| 1 | 215/75/R15 – New Tyres & Tubes (Bolero Jeep) | 09 | 11289.06 | 101601.54 | 11000.00 | 99000.00 | 11500.00 | 103500.00 |
| 2. | 205/65/R16 – New Tubeless Tyres (Innova) | 05 | 13656.25 | 68281.25 | 13200.00 | 66000.00 | 13800.00 | 69000.00 |
| 3. | Provision for GST 28% | | | 47567.18 | | 46200 | | 48300.00 |
| **Total** | | 14 | | 217449.97 | | 211200 (-2.87%)Less | | 220800 (+1.54%) more |
| EMD Rs.4,500/- | | | | | State Bank of India, Karumandapam Trichy D.D.No. 321688, Rs.4500/- dt:15.03.2025 | | MSME Certificate for EMD Exemption | |

மேற்கண்ட விவரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.2,17,449.97/-ஐ காட்டிலும் (-2.87%) குறைவாக **ரூ.2,11,200/-க்கு** ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s.K.B.R. Tyres, Kumbakonam** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்ததை ஏற்று பணியினை மேற்கொள்வதற்கு மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிக்கு ஆணையர் அவர்களின் தீர்மானம் எண்.239நாள்:27.01.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தினசரி அலுவலக கள ஆய்வு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்களுக்கு தேவையான புதிய டயர்கள் மற்றும் டியூப்கள் – 14 எண்ணிக்கைகள் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின் படி மதிப்பீட்டு விலையை விட(-2.87%) குறைவாக வழங்கியுள்ள **M/s.K.B.R. Tyres, Kumbakonam** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.2,11,200/- செலவில் பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத்தை 2025-26ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இலகுரக வாகன பராமரிப்பு செலவின கணக்கு தலைப்பு எண்.2305301ல், ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

145/2025 /இ5(மையம்)

**தீர்மானம் எண்: 238 பொருள்: 20 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 21

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 76 எண்ணிக்கை ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ரூ.242.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.35 நாள்:26.02.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:343/2024-25, வ.எண்.1ன் வாயிலாக 21.03.2025ம் தேதி கோரியதில் பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty | Estimate | | M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy | | M/s. Fusion manpower & infra service, Trichy | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 76 ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணி (EPF 13% மற்றும் சேவை கட்டணம் 5% உட்பட) | 76 Nos x 364 Days | 873.50 | 24164504 | 871 | 24095344 | 875 | 24206000 |
| **கூடுதல்** | | | **24164504** | **24095344 (-0.29%)Less** | | **24206000 (+0.17%) More** | |
| **EMD** | 242000.00 | | | State Bank of India Ramalinganagar Tiruchirapalli D.D No.413912 Rs. 2,42,000/- | | MSME Certificate for EMD Exemption | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.2,41,64,504/–ஐ காட்டிலும் –0.29% குறைவாக ரூ.2,40,95,344/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று பனியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, குடிநீர் விநியோகம், புதைவடிகால் பராமரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் இதர பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 76 எண்ணிக்கை ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் –0.29% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. Sri Selva Vinayaga Transport & Promoters, Trichy, நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.2,40,95,344/– செலவில் பணியை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2025–26ம் ஆண்டு வருவாய் நிதி செலவினங்கள் ஊதியம் தலைப்பில் – கூலி இதர இனத்திற்கு கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

632/2025/இ5 (மையம்)

**தீர்மானம் எண்: 239 பொருள்: 21 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 22

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 எண்ணிக்கை ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ரூ.210.00 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.36, நாள்:26.02.2025ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்,343/2024–25, வ.எண்.2ன் வாயிலாக 21.03.2025ம் தேதி கோரியதில், பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Name of work | Qty | Estimate | | M/s. TDMS & Co, Trichy | | Mr. R.Devarasan, Contractor, Trichy | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளிநிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணி (EPF 13% மற்றும் சேவை கட்டணம் 5% உட்பட) | 66 Nos x 364 Days | 873.50 | 20984964 | 871 | 20924904 | 890 | 21381360 |
| | | | 20984964 | 20924904 (-0.29%)Less | | 21381360 (+1.89%) more | |
| EMD | 210000.00 | | | State Bank of India Edamalaipatti pudhur D.D No.773529 Rs. 2,10,000/- Date.17.03.2025 | | State Bank of India, Woraiyur D.D.No.104594, Rs.2,10,000/- Date.21.03.2025 | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.2,09,84,964ஐ காட்டிலும் -0.29% குறைவாக ரூ.2,09,24,904/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. TDMS & Co, Trichy** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளதை ஏற்க மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

1. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மாநகர வார்டு பகுதிகளில் சேகரமாகும் தோட்டக்கழிவுகள் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால்களில் உள்ள மண்துகள்கள் அப்புறப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் இலகுரக டிப்பர் வாகனங்களை இயக்குவதற்கு தேவையான 66 எண்ணிக்கை ஓட்டுநர்களை 364 நாட்களுக்கு வெளி நிறுவனம் மூலம் தினக்கூலி முறையில் ஒப்பந்த அடிப்படையில் வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் -0.29% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s. TDMS & Co, Trichy நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.2,09,24,904/- செலவில் பணியை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2025-26 ம் ஆண்டு வருவாய் நிதி செலவினங்கள் ஊதியம் தலைப்பில் - கூலி இதர இனத்திற்கு கணக்கு தலைப்பு எண்.2101010ல் ஒதுக்கீடு செய்யப்படவுள்ள தொகை ரூ.9000.00 லட்சத்தில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

<u>633/2025/இ5(மையம்)</u>

**தீர்மானம் எண்: 240 பொருள்: 22 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 23

இம்மாநகராட்சிக்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனங்கள் ( 2025-2028 ) அனைத்தும் மாமன்ற தீர்மானம் எண்.996 நாள். 30.12.2024ல் அங்கீகரிக்கப்பட்டு குத்தகை உரிம இனங்களுக்கான ஏல பொதுகட்டுப்பாடுகள், தனிக்கட்டுப்பாடுகள், சிறப்பு கட்டுபாடுகள், வசூல் செய்யப்பட வேண்டிய கட்டண விவரங்கள், எல்லை விவரங்கள், வைப்பு தொகை விவரங்கள் ஆகியவை அடங்கிய ஏல விவர அறிக்கை தயார் செய்யப்பட்டு குத்தகை இனங்கள் தனியருக்கு ஒப்படைக்கும் விவரம் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் 30.01.2025 அன்று விளம்பரபடுத்தப்பட்டு ஏல அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்-2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.7 காந்தி சந்தை பகுதியிலுள்ள மூன்று கட்டண கழிப்பிடங்களுக்கும் மற்றும் டைமண்ட் ஜுப்ளி அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திலும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் செய்யும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 26.02.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்-2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.1க்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இதனைத்தொடர்ந்து ஐந்தாவது முறையாக மறுஏலம் /ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் 15.03.2025 அன்று விளம்பரபடுத்தப்பட்டு ஏல அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்-2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.7 காந்தி சந்தை பகுதியிலுள்ள மூன்று கட்டண கழிப்பிடங்களுக்கும் மற்றும் டைமண்ட் ஜுப்ளி அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திலும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25.03.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்-2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.7க்கான ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவரும் குறைந்த தொகை கோரியுள்ளதால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இவ்வலுவலக கடிதம் வாயிலாக ஐந்தாவது முறையாக மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை அனைத்து வார்டுகுழு அலுவலக விளம்பர பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்-2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.7 காந்தி சந்தை பகுதியிலுள்ள மூன்று கட்டண கழிப்பிடங்களுக்கும் மற்றும் டைமண்ட் ஜுப்ளி அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திலும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் செய்யும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 02.04.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்-2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.7க்கான ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளவர்களின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

**குத்தகை இனம் எண்.7 காந்தி சந்தை பகுதியிலுள்ள மூன்று கட்டண கழிப்பிடங்களுக்கும் மற்றும் டைமண்ட் ஜுப்ளி அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திலும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் செய்யும் உரிமம்**

| வ. எண். | குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ. | 2024-25 ஆம் ஆண்டு குத்தகை தொகை விவரம் | குத்தகை இனத்தின் மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு கோரிய உயர்ந்த பட்ச தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | திருமதி.T.சிந்துஜா, த/பெ. திருவேங்கடம், 23, நடுநெய்க்காரத் தெரு, பாலக்கரை, திருச்சி-1. | ரூ.8,00,000/- வ.வ.வோ.எண்.. 362865 நாள். 24.03.25 இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி<br><br>ரூ.2,00,000/- வ.வ.வோ.எண்.. 365483 நாள். 21.02.25 இந்தியன் ஓவர்ஸிஸ் வங்கி | துறை ரீதியான வசூல் ரூ.27,98,276 (01.04.2024 முதல் 24.03.2025 வரை) | 45,16,092/- | (ஆண்டுக்கு) 47,00,000/-<br><br>12,877/- (நாள் ஒன்றுக்கு) | நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.T.சிந்துஜா என்பவர் கலந்து கொண்டு உயர்ந்தபட்ச தொகையாக ரூ.47,00,000/-ஐ கோரியுள்ளார். திருமதி.T.சிந்துஜா என்பவர் கோரிய உயர்ந்தபட்ச குத்தகை தொகையானது 2024-25 ஆம் ஆண்டு துறை ரீதியான வசூலை விட ரூ. 19,01,724/- அதிகம் மேலும், 2022-25 மூன்றாண்டு சராசரி தொகையினை காட்டிலும் ரூ.1,83,908/- அதிகமாக உள்ளதாலும், மேற்படி இனத்திற்கு ஐந்தவாது முறையாக நடைபெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினால் எதிர்காலத்தில் குத்தகை இனத்தினை ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எடுக்க எவரும் முன்வரவில்லை எனில் துறை ரீதியான வசூல் பணியில் நிர்வாகத்திற்கு ( பணியாளர் ஊதியம், விளம்பர கட்டணம், மின்சார கட்டணம், அச்சுக்கட்டணம், தூய்மை பணிக்கான அதற்கான உபகரணங்கள் மற்றும் இதர செலவினங்கள்) வருவாய் இழப்பு ஏற்படுவதுடன் அதிக பணிசுமை ஏற்படும் என்பதாலும், தற்சமயம் இவ்வினத்தில் காந்தி மார்க்கெட் உட்புறத்தில் உள்ள இரண்டு கட்டண கழிப்பிடங்கள் பழுதடைந்துள்ளதன் கரணமாக இடிக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி இரண்டு கட்டண கழிப்பிடங்களும் கட்டி ஒப்படைக்கும் நாளது வரை மேற்படி குத்தகை இனத்திற்கான தொகையினை அப்போது உள்ள நிலவரப்படி கணக்கிட்டு அடுத்து வரும் குத்தகை தொகையிலிருந்து கழித்து கொள்ளலாம். எனவே, இவ்வினத்தினை திருமதி. T.சிந்துஜா என்வருக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவுக் பொருள் வைக்கப்படுகிறது. |

மேற்கண்ட பட்டியலில் கலம் எண்.8ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள். 25.05.09ன்படியும் இம்மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு திருமதி.T.சிந்துஜா என்பவருக்கு இனத்தினை ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. இனம் 7 காந்தி சந்தை டைமண்ட் ஜுப்ளி கட்டிட வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் காந்தி சந்தை பகுதியினை சுற்றியுள்ள மூன்று கட்டண கழிப்பிடங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை திருமதி.T.சிந்துஜா என்பவருக்கு 2025–26ஆம் ஆண்டுக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.
2. அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள். 25.05.09ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 2026–27க்கு முதலாமாண்டு குத்தகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்தும், 2027–28க்கு இரண்டாமாண்டு குத்தகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்தும் வழங்கிடவும், ஆண்டிற்கு வருமான வரி 2%,GST 18% மற்றும் தொழில் வரி ரூ.2500/– ஆண்டிற்கு என மூன்றாண்டிற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முடிவு செய்யலாம்.
3. கட்டுமான பணிகள் நடைபெற்று வரும் இரண்டு கழிப்பிடங்கள் கட்டுமான பணிகள் முடிவுற்று குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்யும் நாள் வரை செயல்படாத கழிப்பிடங்களுக்கு உண்டான தொகையினை அடுத்து வரும் குத்தகை தொகையில் கழித்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

அ1 (வா.கு.அ–2) / 718 / 2025

**தீர்மானம் எண்: 241 பொருள்: 23 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 24

இம்மாநகராட்சிக்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனங்கள் ( 2025–2028 ) அனைத்தும் மாமன்ற தீர்மானம் எண்.966 நாள். 30.12.2024 அங்கீகரிக்கப்பட்டு குத்தகை உரிம இனங்களுக்கான ஏல பொதுகட்டுப்பாடுகள், தனிக்கட்டுப்பாடுகள், சிறப்பு கட்டுபாடுகள், வசூல் செய்யப்பட வேண்டிய கட்டண விவரங்கள், எல்லை விவரங்கள், வைப்பு தொகை விவரங்கள் ஆகியவை அடங்கிய ஏல விவர அறிக்கை தயார் செய்யப்பட்டு குத்தகை இனங்கள் தனியருக்கு ஒப்படைக்கும் விவரம் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் 30.01.2025 அன்று விளம்பரபடுத்தப்பட்டு ஏல அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்–2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.8 செங்குளம் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மேற்படி சந்தையுடன் இணைந்தள்ள நவீன கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 26.02.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்–2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.8க்கான ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் இருவர் கலந்து கொண்டு ஏலத்தின் ஆரம்ப விலைப்புள்ளியாக 2024–25 ஆம் ஆண்டு குத்தகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்து 12,50,000/– கோரப்பட்டது. மேற்படி சந்தையில் இத்தொகை மிக அதிகம் எனவும், வசூல் செய்யும் அளவுக்கு கடைகள் இல்லை தெரிவித்து ஏலம் கோர விருப்பமில்லை என பதிவு செய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து இரண்டாவது முறையாக மறுஏலம் /ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை தினகரன் தினசரி நாளிதழில் 15.03.2025 அன்று விளம்பரபடுத்தப்பட்டு ஏல அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்–2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.8 செங்குளம் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்று மேற்படி சந்தையுடன் இணைந்தள்ள நவீன கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 25.03.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்–2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.8க்கான ஏலம் / ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவரும் குறைவான குத்தகை தொகை கோரியதால் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

இவ்வலுவலக கடிதம் வாயிலாக மூன்றாவது முறையாக மறுஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஏல அறிவிப்பினை அனைத்து வார்டுகுழு அலுவலக விளம்பர பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு தெரிவிக்கப்பட்டுள்ளவாறு இவ்வார்டு குழு அலுவலகம்–2க்குட்பட்ட மூன்றாண்டு குத்தகை இனம் எண்.8 செங்குளம் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மேற்படி சந்தையுடன் இணைந்துள்ள நவீன கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 02.04.2025 அன்று இவ்வார்டுகுழு அலுவலகம்–2ல் நடைபெற்றது. மேற்படி இனம் எண்.8க்கான ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டுள்ளவர்களின் விவரம் கீழ்கண்டுள்ளவாறு.

**குத்தகை இனம் எண்.8 செங்குளம் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மேற்படி சந்தையுடன் இணைந்தள்ள நவீன கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் உரிமம்**

| வ. எண். | குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ. | 2024–25 ஆம் ஆண்டு குத்தகை தொகை விவரம் | குத்தகை இனத்தின் மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு கோரிய தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | மும்தாஜ் பேகம் / K.ஷாகுல் ஹமீது, 27–B. /2. மூலைக்கொல்லை தெரு, தென்னூர், திருச்சி–17. | ரூ.2,00,000/– | 12,25980/– | 11,96,527/– | 9,51,555/– | நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட திருமதி.மும்தாஜ் பேகம் என்பவர் உயர்ந்தப்பட்ச தொகையாக ரூ.9,51,555/–ஐ கோரியுள்ளார். திருமதி.மும்தாஜ் பேகம் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச குத்தகை தொகையானது 2024–25 ஆம் ஆண்டு குத்தகை தொகையை விட ரூ.2,74,869/– குறைவு மேலும், மூன்றாண்டு சராசரி தொகையினை காட்டிலும் ரூ.2,44,972/– குறைவாக உள்ளதாலும், மேற்படி குத்தகைதாரரின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்து மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரினால் எதிர்காலத்தில் குத்தகை இனத்தினை ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எடுக்க எவரும் முன்வரவில்லை எனில் துறை ரீதியான வசூல் பணியில் நிர்வாகத்திற்கு ( பணியாளர் ஊதியம், விளம்பர கட்டணம், மின்சார கட்டணம், அச்சுக் கட்டணம், தூய்மை பணிக்கான அதற்கான உபகரணங்கள் மற்றும் இதர செலவினங்கள்) வருவாய் இழப்பு ஏற்படுவதுடன் அதிக பணிசுமை ஏற்படும் என்பதாலும், 2025–26 ஆம் ஆண்டுக்கான முதல் அழைப்பில் |

| வ. எண். | குத்தகைதாரரின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி முன் வைப்புத் தொகை ரூ. | 2024–25 ஆம் ஆண்டு குத்தகை தொகை விவரம் | குத்தகை இனத்தின் மூன்றாண்டு சராசரி தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்டு கோரிய தொகை ரூ. | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | | | | | | ஏலத்தில் கலந்து கொண்ட இருவர் மேற்படி குத்தகைக்கு இத்தொகையானது மிக அதிகம் எனவும், இரண்டாவது அழைப்பில் கலந்து கொண்ட திருமதி.மும்தாஜ் பேகம் என்பவர் 9,50,000/–க்கு கோரியுள்ளார். மேலும், இச்சந்தையில் கடைகள் அதிகமாக இல்லாமலும், வார இறுதி நாட்கள் மட்டுமே நடைபெறுவதாக தெரிவித்து ஏலம் கோர விருப்பமில்லை என பதிவு செய்துள்ளனர். 2019 – 2022 ஆம் ஆண்டு சராசரி ரூ.7,56,333/–ஐ காட்டிலும் ரூ.1,93,667/– அதிகமாக உள்ளதாலும், இம்மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கம் பொருட்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.9,51,555/– கோரிய திருமதி.மும்தாஜ்பேகம் என்பவருக்கு இக்குத்தகை இனத்தினை ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது. |

மேற்கண்ட பட்டியலில் கலம் எண்.7ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள். 25.05.09ன்படியும், இம்மாநகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி குத்தகை இனத்தினை திருமதி.மும்தாஜ்பேகம் என்பவருக்கு ஒப்படைப்பு குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், உரிய அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. குத்தகை இனம் எண்.8 செங்குளம் டி.வி.எஸ் டோல்கேட் பகுதியில் அமைந்துள்ள தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் மேற்படி சந்தையுடன் இணைந்தள்ள நவீன கழிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டணங்கள் வசூல் செய்து கொள்ளும் உரிமத்தினை திருமதி.மும்தாஜ் பேகம் என்பவருக்கு 2025–26ஆம் ஆண்டுக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.
2. அரசாணை (நிலை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.) துறை நாள். 25.05.09ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 2026–27க்கு முதலாமாண்டு குத்தகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்தும், 2027–28க்கு இரண்டாமாண்டு குத்தகை தொகையிலிருந்து 5% உயர்வு செய்தும் வழங்கிடவும், ஆண்டிற்கு வருமான வரி 2% மற்றும் தொழில் வரி ரூ.2500/– ஆண்டிற்கு என மூன்றாண்டிற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் முடிவு செய்யலாம்.

<u>அ1 (வா.கு.அ–2) / 719 / 2025</u>

**தீர்மானம் எண்: 242 பொருள்: 24 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 25

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.50 காஜா பேட்டை புதுத்தெரு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திருச்சிராப்பள்ளி கிழக்கு அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.45.20 இலட்சம் மதிப்பீட்டில் 1155.00 ச.அடியில் மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த சமுதாயகூடத்தை அப்பகுதியில் உள்ள ஏழை எளிய மக்கள் பயன் படுத்தி கொள்ள பொதுப்பணி துறை விலையின் படி ஒரு நாளைக்கு ரூ.3500/– கட்டணம் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

சமுதாயக்கூடத்திற்கு ஒருநாள் வாடகையாக ரூ.3500/– என நிர்ணயம் செய்ய அனுமதி அளிக்கலாம்

எப்1/2984/2024 மண்டலம் 2

**தீர்மானம் எண்: 243 பொருள்: 25 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 26

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலக எண்.5க்குட்பட்ட தென்னூர் கோஷா மாநகராட்சி உருது துவக்கப்பள்ளியானது ஜெனரல் பஜார் மற்றும் பென்சனர் தெரு மசூதி ஜமாத்துக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

தென்னூர் கோஷா மாநகராட்சி உருது துவக்கப்பள்ளி இயங்கி வரும் ஜெனரல் பஜார் மற்றும் பென்சனர் தெரு மசூதி ஜமாத்துக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு மாமன்ற தீர்மானம் எண். 342, நாள். 13.03.2024 இல் அளிக்கப்பட்ட ஒப்புதலின்படி, 01.04.2024 முதல் 31.03.2025 வரை மாத வாடகையாக ரூ.12,000/– ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தென்னூர் கோஷா மாநகராட்சி உருது துவக்கப்பள்ளி இயங்கி வரும் ஜெனரல் பஜார் மற்றும் பென்சனர் தெரு மசூதி ஜமாத்துக்குச் சொந்தமான கட்டிடத்திற்கான மாத வாடகை ரூ.12,000/– வீதம் 12 மாதங்களுக்கு மொத்தம் ரூ.1,44,000/–ஐ (01.04.2025 முதல் 31.03.2026 வரை) செலுத்த மாமன்ற அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

தென்னூர் கோஷா மாநகராட்சி உருது துவக்கப்பள்ளி இயங்கி வரும் ஜெனரல் பஜார் மற்றும் பென்சனர் தெரு மசூதி ஜமாத்துக்குச் சொந்தமான கட்டிடத்திற்கான மாத வாடகை ரூ. 12,000/– வீதம் 12 மாதங்களுக்கு மொத்தம் ரூ.1,44,000/–ஐ (01.04.2025 முதல் 31.03.2026 வரை) செலுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

9787 / 2022 / சி1(மையம்)

**தீர்மானம் எண்: 244 பொருள்: 26 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 27

இம்மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளிலும் பரோபரியாக சுற்றித் திரியும் தெரு நாய்களால் வாகனத்தில் செல்பவர்கள், பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் பொது மக்களுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டதாலும் இதனை கட்டுப்படுத்தகோரி பொதுமக்களிடமிருந்து அதிகமாக புகார்கள் மற்றும் கோரிக்கைகள் மற்றும் இது தொடர்பாக மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை எடுக்கக்கோரி பத்திரிக்கை செய்திகளிலும் தொடர்ந்து செய்திகள் வெளிவந்ததை தொடர்ந்து மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சியில் தற்போது நான்கு ABC/ARV மையங்களில் M/s International Trust of Peace, சென்னை தொண்டு நிறுவனத்தின் மூலம் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ரேபீஸ் தடுப்பூசி போடும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம்மாநகராட்சியில் 2023–2024 ஆம் நிதி ஆண்டில் 11929 தெருநாய்களுக்கும் 2024–2025 ஆம் நிதி ஆண்டில் 9839 தெருநாய்களுக்கும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ரேபீஸ் தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளில் பரோபரியாக சுற்றித்திரியும் தெருநாய்களின் எண்ணிக்கை கணக்கெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் தற்போது இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 43767 தெருநாய்கள் உள்ளதாக கணக்கெடுப்பு பணி அறிக்கை பெறப்படுள்ளது.

ABC/ARV பணியின் அவசர அவசியம் கருதி 2025–2026 ஆம் நிதி ஆண்டில் மேலும் 10000 தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ரேபீஸ் தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ள M/s International Trust of Peace, சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், அரசு செயலாளர் அவர்களின் G.O.(4D) No.01 நாள்: 17.03.2023 உத்தரவில் கண்டுள்ளவாறு நாய் ஒன்றிற்கு ரூ165/– வீதம் இதற்கான செலவினம் ரூ. 165.00 இலட்சம் தொகைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. 10000 தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து ரேபீஸ் தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளவும் இப்பணிக்கான செலவினம் ரூ. 165.00 இலட்சம் தொகைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. M/s International Trust of Peace, சென்னை நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவீனத்தினை 2025–2026 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட தலைப்பு எண் 2308003 ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**எச்4/3907/2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 245 பொருள்: 27 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 28

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.02, 03, 04 & ,05, வார்டு எண்.49,34,35.51,52,53,54,57,56 & 55க்குட்பட்ட (புதிய வார்டு எண்.29,47,61.27,11,40,45,26,25 & 24) கீழ்கண்ட பணிகளை திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் முன் வைப்பு/பிணை வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.**

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ஆகியவை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | பழைய வார்டு எண்.49 க்குட்பட்ட காயிதே மில்லத் நகர் பிரதானச் சாலை மற்றும் ஸ்டில் தோப்பு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை மைய சுடுகலவை இயந்திரம் மூலம் பேவர் பினிஷர் உதவியுடன் மேம்படுத்தும் பணி **மதிப்பீடு ரூ.40.00 இலட்சம் இ2/144/2020 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 07.11.20 | 1,19,215 (3%) | XIII | 61 | 814 |
| | | | EMD DD No.289657 Dt. 27.01.20 IOB | 40,000 | XII | 111 | 1640 |
| 2 | பழைய வார்டு எண்.34 & 35க்குட்பட்ட காந்தி தெரு, பெரியார் தெரு, பென்சனர் காலனி மற்றும் அந்தோணியார் கோவில் தெருக்களில் மழைநீர் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.34.30 இலட்சம் இ2/197/2020 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 09.10.2020 | 1,70,032 (5%) | XIII | 55 | 734 |
| | | | EMD DD No.289640 Dt. 24.01.20 IOB | 34,300 | XII | 111 | 1643 |
| 3 | பழைய வார்டு எண்.51க்குட்பட்ட பட்டாபிராமன் பிள்ளை பிரதானச் சாலையில் தார்பேட்ச் அமைக்கும் பணி **மதிப்பீடு ரூ.9.95 இலட்சம் இ2/2465/2018 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 30.06.2018 | 29,787 (3%) | XI | 16 | 265 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | பழைய வார்டு எண்.57க்குட்பட்ட அண்ணாமலை நகர், முல்லைநகர் சாலையில் மழைநீர் வடிகால் கட்டும் பணி **மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் இ2/7773/2017 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.11.01.18 | 11,565 (3%) | X | 47 | 752 |
| 5 | பழைய வார்டு எண்.40க்குட்பட்ட கொல்லாங்குளம் வாய்கால் மற்றும் வார் எண்.45க்குட்பட்ட ஜெயநகர் வாய்கால் தூர்வாரும் பணி **மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் இ2/4707/2018 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.06.10.16 | 14,531 (3%) | IX | 40 | 526 |
| 6 | பழைய வார்டு எண்.40க்குட்பட்ட எடமலைப்பட்டிப்புதூர் எம்.ஜி.ஆர் நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகத்தில் கிராவல் நிரப்புதல், ஸ்கெடா அறை மராமத்து, மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் சுற்றுசுவர்களுக்கு வர்ணம் பூசும் பணி. **மதிப்பீடு ரூ.9.25 இலட்சம் இ2/52/2020 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.17.07.20 | 27,741 (3%) | XIII | 99 | 1327 |
| 7 | பழைய வார்டு எண்.51, 52, 53 & 54க்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள மழைநீர் வடிகால்களில் மனித ஆற்றல் மூலம் தூர்வாரும் பணி. **மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் இ2/10148/2017 (மை)** | திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.05.05.18 | 29,573 (3%) | XI | 9 | 156 |
| **மொத்தம்** | | | | 4,76,744 | | | |

ஒப்பந்ததாரர் திரு.ஆர் வெள்ளைச்சாமி, திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை **ரூ.4,76,744/-**ஐ, காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.4,76,744/-**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து(Lapsed Deposite Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/ 144/2020(மையம்)**

**தீர்மானம் எண்: 246 பொருள்: 28 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 29

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.05, வார்டு எண்.51, 52, 53, & 57க்குட்பட்ட (புதிய வார்டு எண்.25, 26, 27, & 11) கீழ்கண்ட பணிகளை திரு.எஸ் பெரியசாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் முன் வைப்பு/பிணை வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.**

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ஆகியவை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட பிஷப் ஹீபர் கல்லூரி மையதானத்தில் கோவிட்–19 நோய்கிருமி பரவுவதை சமூக இடைவெளி பின்பற்றி தடுக்கும் பொருட்டு தற்காலிக காய்கறி சந்தை அமைப்பதற்கு தேவையான அனைத்து தற்காலிக பணிகள் மேற்கொள்ளும் பணி. **மதிப்பீடு ரூ.10.40 இலட்சம் இ2/7314/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 21.10.20 | 41,342 (4%) | XIII | 52 | 693 |
| | | | EMD /ASD தொகை | 20,800 | XIII | 51 | 692 |
| 2 | பழைய வார்டு எண்.51 க்குட்பட்ட விருப்பாட்சிபுரம் வாய்க்கால் மற்றும் வார்டு எண்.53க்குட்பட்ட கணபதி நகர் வாய்க்கால் ஆகிய இரண்டு வாய்க்கால்களிலும் மனித மற்றும் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி. **மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் இ2/9551/2019(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 09.03.2020 | 17,882 (4%) | XII | 117 | 1728 |
| 3 | பழைய வார்டு எண்.57 க்குட்பட்ட கோணக்கரை மயானத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல் **மதிப்பீடு ரூ.2.60 இலட்சம் இ2/7411/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள். 11.11.2020 | 10,312 (4%) | XIII | 58 | 779 |
| | | | EMD /ASD தொகை | 5,200 | XIII | 58 | 778 |
| 4 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட கோட்ட அலுவலக வளாகத்தில் கோவிட்–19 நோய்கிருமி தொற்று நோய்க்கான தற்காலிக தகர பரிசோதனை மையம் அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் இ2/3346/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.18.03.21 | 3,991 (4%) | XIII | 82 | 1108 |
| | | | EMD /ASD தொகை | 2,000 | XIII | 82 | 1107 |
| 5 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட கல்லாங்காடு குறுக்கு தெருக்களில் மழைநீர் சேகரத் தொட்டிக் கட்டும் பணி. **மதிப்பீடு ரூ.9.25 இலட்சம் இ2/5386/2019(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.09.12.19 | 36,846 (4%) | XII | 99 | 1463 |
| | | | EMD DD no.957462 Dt.18.06.19 IB | 10,000 | XII | 32 | 468 |
| 6 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட பிஷப் ஹீபர் கல்லூரி மையதானத்தில் கோவிட்–19 நோய்கிருமி பரவுவதை சமூக இடைவெளி பின்பற்றி தடுக்கும் பொருட்டு தற்காலிக காய்கறி சந்தை அமைப்பதற்கு தேவையான அனைத்து தற்காலிக பணிகள் மேற்கொள்ளும் பணி. **மதிப்பீடு ரூ.5.85 இலட்சம் இ2/4990/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.17.08.20 | 23,238 (3%) | XIII | 39 | 529 |
| | | | EMD /ASD தொகை | 11,700 | XIII | 39 | 528 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட பிஷப் ஹீபர் கல்லூரி மையதானத்தில் கோவிட்-19 நோய்கிருமி பரவுவதை சமூக இடைவெளி பின்பற்றி தடுக்கும் பொருட்டு தற்காலிக காய்கறி சந்தை அமைப்பதற்கு தேவையான அனைத்து தற்காலிக பணிகள் மேற்கொள்ளும் பணி. **மதிப்பீடு ரூ.7.95 இலட்சம் இ2/3472/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.12.05.20 | 31,537 (3%) | XIII | 21 | 283 |
| | | | EMD /ASD தொகை | 15,900 | XIII | 21 | 283 |
| 8 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட புத்தூர் ஈ வி ஆர் சாலை அண்ணல் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை வளாகத்திலுள்ள தந்தை பெரியார் திருஉருவ சிலையினை சுற்றி வேலி அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.0.55 இலட்சம் இ2/7901/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.17.02.21 | 2,107 (4 %) | XIII | 79 | 1068 |
| | | | EMD Receipt no.086/K1/1/20-21 dt.15.10.2020 | 550 | | | |
| | | | ASD DD no.572783 dt.07.12.2020 IB | 550 | XIII | 72 | 962 |
| 9 | பழைய வார்டு எண்.52 க்குட்பட்ட பிஷப் ஹீபர் கல்லூரி மையதானத்தில் கோவிட்-19 நோய்கிருமி பரவுவதை சமூக இடைவெளி பின்பற்றி தடுக்கும் பொருட்டு தற்காலிக காய்கறி சந்தை அமைப்பதற்கு தேவையான அனைத்து தற்காலிக பணிகள் மேற்கொள்ளும் பணி. **மதிப்பீடு ரூ.7.85 இலட்சம் இ2/3346/2020(மை)** | திரு.எஸ் பெரியசாமி, திருச்சி | முதல் மற்றும் இறுதி பட்டியல் நாள்.28.04.20 | 31,213 (4%) | XIII | 5 | 65 |
| | | | EMD /ASD தொகை | 15,700 | XIII | 5 | 64 |
| **மொத்தம்** | | | | **2,80,868** | | | |

ஒப்பந்ததாரர் திரு.எஸ் பெரியசாமி, திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை **ரூ.2,80,868/-ஐ**, காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.2,80,868/-ஐ** காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து(Lapsed Deposite Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/7314/2020(மையம்)**

**தீர்மானம் எண்: 247 பொருள்: 29 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 30

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு-01, வார்டு எண்.06-க்குட்பட்ட நேருஜி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் வர்ணம் பூசுதல், தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் செய்தல், மராமத்து மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளை ரூ.34.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பெரியசாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. எனவே, இப்பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். இப்பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் நிலுவையில்லை.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | நாள் | காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண்.06-க்குட்பட்ட நேருஜி மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் வர்ணம் பூசுதல், தண்ணீர் மற்றும் மின்சார வசதிகள் செய்தல், மராமத்து மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ. 34.50 இலட்சம். | திரு.எஸ். பெரியசாமி, திருச்சி | 19.10.2020 | 1,24,440/- |

எனவே, ஒப்பந்ததாரர் திரு.எஸ். பெரியசாமி, திருச்சி அவர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை 1,24,440/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.எஸ். பெரியசாமி, திருச்சி அவர்கள் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை 1,24,440/-ஐ காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ8 / 165 / 2020 (மையம்)**

**தீர்மானம் எண்: 248 பொருள்: 30 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 31

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.04, வார்டு எண்.35க்குட்பட்ட (புதிய வார்டு எண்.61) கீழ்கண்ட பணிகளை திரு.ஜி வெங்கடேஷ், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் முன் வைப்பு/பிணை வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை.**

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ஆகியவை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண்& வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | பழைய வார்டு எண்.35 க்குட்பட்ட பெரியார் நகர் பகுதியிலுள்ள பூங்காவில், யோகா கூடம், திறந்தவெளி உடற்பயிற்சி மையத்திற்கான தரைதளம், அலங்கார மின்விளக்குகள் மற்றும் முகப்பு வளைவு ஆகியவை மேம்படுத்தும் பணி. **மதிப்பீடு ரூ.36.00 இலட்சம் இ2/1821/2019 (மை)** | திரு.ஜி வெங்கடேஷ், திருச்சி | முதல் மற்றும் பகுதி பட்டியல் நாள். 05.09.2019 | 1,43,546 (4%) | XII | 67 | 989 |
| 2 | பழைய வார்டு எண்.35 க்குட்பட்ட ஆர் எஸ் புரம் வடக்கு பூங்காவில் பேவர் பிளாக்குகள் அமைத்தல், பசுமைபரப்புகள் அமைத்தல் மற்றும் கதவுகள் அமைக்கும் பணி. **மதிப்பீடு ரூ.13.50 இலட்சம் இ2/1399/2018 (மை)** | திரு.ஜி வெங்கடேஷ், திருச்சி | முதல் மற்றும் பகுதி பட்டியல் நாள். 18.08.2018 | 53,844 (4%) | xl | 22 | 388 |
| | **மொத்தம்** | | | **1,97,390** | | | |

ஒப்பந்ததாரர் திரு.ஜி வெங்கடேஷ், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.1,97,390/−ஐ, காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.1,97,390/−ஐ** காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து(Lapsed Deposite Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/ 1821/2019(மையம்)**

**தீர்மானம் எண்: 249 பொருள்: 31 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 32

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.04, வார்டு எண்.40க்குட்பட்ட (புதிய வார்டு எண்.56) கீழ்கண்ட பணியினை மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை மற்றும் முன் வைப்பு/பிணை வைப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொண்டமைக்கு **தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை**.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ஆகியவை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூ) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண்& வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொகுப்பு | ப. எண் | வ. எண் |
| 1 | பழைய வார்டு எண்.40 க்குட்பட்ட கருமண்டபம் நவீன எரிவாயு தகன மேடை வளாகத்தில் எரியூட்டும் உபகரணங்களை சர்வீஸ் செய்து மராமத்துப் பணிகள் மேற்கொள்ளுதல். **மதிப்பீடு ரூ.11.90 இலட்சம்** இ2/3336/2020 (மை) | மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி | முதல் மற்றும் பகுதி பட்டியல் நாள். 04.12.20 | 35,621 (3 %) | XIII | 64 | 865 |
| | | | EMD DD No.263494 Dt. 29.5.2020 Indian Bank | 11.900 | XIII | 25 | 332 |
| **மொத்தம்** | | | | **47,521** | | | |

ஒப்பந்ததாரர் மெசர்ஸ். பாலாஜி எலக்ட்ரிக்கல்ஸ், திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை **ரூ.47,521/−ஐ,** காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை **ரூ.47,521/−ஐ** காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து(Lapsed Deposite Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/ 3336/2020(மையம்)**

**தீர்மானம் எண்: 250 பொருள்: 32 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 33

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்க்காணும் பணி திரு.G.வெங்கடேஷ், திருச்சி ஒப்பந்ததாரால் செய்து முடிக்கப்பெற்று, பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட பணிக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிக்கு தணிக்கை தடை ஏதும் நிலுவை இல்லை.

மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகையின் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள். | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண்.64க்குட்பட்ட வள்ளுவர் நகர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வளாகத்தில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ளும் பணி<br><br>**மதிப்பீடு ரூ.27.20 இலட்சம்** | ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.63/2019–20 வ.எண்.01 நாள். 16.07.2019 | EMD 2% DD – ICICI Bank DD.No.507164 Date:16.07.2019 | 27,500 |
| | | | Addl .EMD 2% NSC | – |
| | | | 13.08.2020 | 75,242 |
| | | | 25.10.2021 | 32,434 |
| | **மொத்தம்** | | | **27,500**<br>**1,07,676** |

மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.ஜி.வெங்கடேஷ் அவர்களுக்கு மேற்கண்ட பணிக்கு செலுத்தப்பட்ட வைப்பு தொகை ரூ.27,500/–, பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்பு தொகை ரூ.1,07,676/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு அனுமதி கோரி மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு மேற்கண்ட ஒப்பந்ததாரர் திரு.ஜி.வெங்கடேஷ் திருச்சி அவர்களுக்கு, வைப்பு தொகை ரூ.27,500/–ம், பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்பு தொகை ரூ.1,07,676/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4 /4655/ 2019 (மையம் )**

**தீர்மானம் எண்: 251 பொருள்: 33 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்: 34

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு–04, வார்டு எண்.61(பழைய வார்டு எண்.35)க்குட்பட்ட காமராஜ் நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மராமத்து மற்றும் வர்ணம் பூசும் பணியினை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. எனவே, இப்பணிக்கு செலுத்தியுள்ள முன் வைப்புத் தொகை, கூடுதல் வைப்புத் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ஆகியவற்றினை திரும்ப வழங்குமாறு கோரியுள்ளனர். இப்பணியினை மேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் நிலுவையில்லை.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் விவரம் | நாள் | முன்வைப்புத் தொகை/கூடு தல் வைப்புத் தொகை/காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வார்டு எண்.61(பழைய வார்டு எண்.35)க்குட்பட்ட காமராஜ் நகர் மாநகராட்சி தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் மராமத்து மற்றும் வர்ணம் பூசும் பணியினை மேற்கொள்ளுதல்.<br>மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் | மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி | 29.01.2020 | 25,000/– |
| | | | 10.06.2020 | 25,000/– |
| | | | 01.03.2021 (1st & Part) | 59,355/– |

எனவே, ஒப்பந்ததாரர் மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தினர் செலுத்திய முன்வைப்புத் தொகை ரூ.25,000/–, கூடுதல் வைப்புத் தொகை ரூ.25,000/–, முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகை ரூ.59,355/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு ஒப்பந்ததாரர் மெசர்ஸ். நாச்சியார் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருச்சி நிறுவனத்தினர் செலுத்திய முன்வைப்புத் தொகை ரூ.25,000/–, கூடுதல் வைப்புத் தொகை ரூ.25,000/–, முதல் மற்றும் பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட காப்புத் தொகை ரூ.59,355/– ஆகியவற்றை காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ8 / 14818 / 2019 (மையம்)**

**தீர்மானம் எண்: 252 பொருள்: 34 அலுவலகக் குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

## பொருள்:35

நடைபாதை வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல் சட்டம் 2014இல் பிரிவு 38 (1)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் திட்டம் 2015–விதியின் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனை குழுவின்படி 6 எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி நகர விற்பனை குழு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

**உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் விவரம்**

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது | 1 |
| 2 | மகளிர் பொது | 1 |
| 3 | மகளிர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 1 |
| 4 | தாழ்த்தப்பட்டோர் | 1 |
| 5 | மாற்றுத் திறனாளிகள் வகுப்பினர் | 1 |
| 6 | சிறுபான்மையினர் வகுப்பினர் | 1 |
| | | **மொத்தம் – 6 எண்ணிக்கை** |

**தேர்தல் விவரம்**

**வைப்பு தொகை: ரூபாய் 2000/–**

| | |
|---|---|
| வேட்பு மனு பெறப்படும் தொடக்க நாள் (காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை) | 12.05.2025 |
| வேட்பு மனு விண்ணப்பம் செய்யும் இறுதி நாள் | 19.05.2025 |
| வேட்பு மனு பரிசீலனை செய்யும் நாள் (காலை 11.00மணி முதல் மாலை 3 மணி வரை) | 20.05.2025 |
| வேட்பு மனு திரும்ப பெறும் நாள் (மாலை 3 மணி வரை) | 21.05.2025 |
| வேட்பாளர் பட்டியல் வெளியிடும் நாள் | 22.05.2025 |
| தேர்தல் நடைபெறும் நாள் | 30.05.2025 |
| தேர்தல் நடைபெறும் நேரம் | காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| வாக்குப்பதிவு நடைபெறும் இடம் | பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி புத்தூர் |
| வாக்கு எண்ணிக்கை நாள்/நேரம்: | 30.05.2025 மாலை 6.00 மணி முதல் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்கண்ட விவரப்படி தேர்தல் நடத்துவதற்கும், மாவட்ட அரசிதழில் சிறப்பு வெளியீடாக பிரசுரம் செய்து அறிவிக்கை வெளியிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. தேர்தல் நடத்துவதற்கான செலவினத் தொகைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**H3/8601/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 253 பொருள்: 35 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள் : 36

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 1, ஸ்ரீரங்கம் வட்டம், **கொண்டயம் பேட்டை, திருவளர்சோலை மற்றும் திம்மராய சமுத்திரம் கிராமம், கீழ்க்கண்ட அரசுப் புறம்போக்கு** இடத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டி குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு, ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்திப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், ஸ்ரீரங்கம் வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் அ3/11/2025, நாள்** 28.03.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | கிராமம் | புல எண் | பரப்பு (ஹெக் ச.மீ.) | வகைப்பாடு |
|---|---|---|---|---|
| 1 | கொண்டயம் பேட்டை | 1807/1 | 0.3049.5 | தெரு |
| 2 | கொண்டயம் பேட்டை | 1903 | 0.0719.5 | தெரு |
| 3 | கொண்டயம் பேட்டை | 3013 | 0.2585.5 | ரோடு |
| 4 | கொண்டயம் பேட்டை | 3019 | 0.3211.5 | ரோடு |
| 5 | திருவளர்ச்சோலை | 97/1 | 1.41.0 | பாதை |
| 6 | திம்மராயசமுத்திரம் | 1842/1 | 0.2572.0 | ரோடு |
| 7 | திம்மராயசமுத்திரம் | 2061 | 0.0883.5 | சந்து |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"தெரு,ரோடு, பாதை மற்றும் சந்து "** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"தெரு,ரோடு, பாதை மற்றும் சந்து"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/4792 /2025/மையம்)

**தீர்மானம் எண்: 254 பொருள்: 36 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

## பொருள் : 37

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் –5, **கல்லறை மேட்டுத்தெரு,கீழ கல்நாயக்கன் தெரு மற்றும் மண்டலம்– 4 காஜா மலை** கீழ்க்கண்ட **அரசுப் புறம்போக்கு** இடத்தில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகட்டி குடியிருந்து வரும் பொதுமக்களுக்கு, ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்திப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் அ3/2448/2024, நாள்** 04.04.2025ன் வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | நகரளவை எண். | பரப்பு (ஹெக் ச.மீ.) | வகைப்பாடு |
|---|---|---|---|
| 1 | வார்டு L. பிளாக் 15ல் நகரளவை எண் 15/1 | 0.33.96 | சர்க்கார் புறம் போக்கு |
| 2 | வார்டு AC. பிளாக் 20ல் நகரளவை எண் 10 | 0.07.84 | சர்க்கார் புறம் போக்கு |

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம் போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம் போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/4793/2025/மையம்)

**தீர்மானம் எண்: 255 பொருள்: 37 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் : 38**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திருச்சிராப்பள்ளி (மேற்கு) வட்டம், வார்டு குழு அலுவலகம் 4 (பொன்மலைக் கோட்டம்), **பிராட்டியூர் (கி) கிராமம், புதிய வார்டு AJ, பிளாக் எண் 17, நகரளவு எண் 1–ல் கட்டுப்பட்ட ஹெக் 0.2321.0 ச.மீ.** பரப்புள்ள இடத்தில் வசித்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் மாமன்றத் தீர்மானத்தினை அனுப்பி வைக்குமாறு, **வருவாய் வட்டாட்சியர், திருச்சி (மேற்கு) வட்டம்** அவர்களின் கடிதம் **ந.க.எண் ஆ3/2448/2024, நாள் 04.04.2025ன்** வாயிலாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இடம் பார்வையிடப்பட்டு, ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி இடம், **எடமலைப்பட்டி புதூர் – இராமச்சந்திரா நகர் 4வது தெருவில்** அமைந்துள்ளது. உத்தேச இடம், நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** என வகைப்பாடு செய்யப்பட்டும், **கலத்தில் "பூஸ்திதி தார்ச் சாலை"** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி இடத்தில் மாநகராட்சியின் திட்டங்கள் ஏதுமில்லாத காரணத்தினாலும், அவ்விடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், தடையின்மை வழங்க மாமன்றத்திற்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** நகரளவைக் கணக்கில், **"சர்க்கார் புறம்போக்கு"** எனக் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி இடத்தில் குடியிருந்து வரும் பொதுமக்களுக்குப் பட்டா வழங்க ஏதுவாக, மாநகராட்சியின் தடையின்மை வழங்கலாம்.

(எப்1/ 4794 /2025/மையம்)

**தீர்மானம் எண்: 256 பொருள்: 38 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது**

**மேயர்**

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**